உ
சிவமயம்



யாழ் ஊரெழுவைப் பிறப்பிடமாகவும்,
சிறுப்பிட்டியை வாழ்விடமாகவும்
லண்டனை இறுதிக்கால வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் திரு கார்த்திகேசு அருளம்பலம்

அவர்களின்

# "நினைவு மலர்"

**01.07.2017**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இப்பூவுலகில் எம் நலத்திற்கும்.
வளர்ச்சிக்கும் மெழுகுவர்த்தியாகி உருகி ஒளியூட்டி.
ஆலமரமாக எம் குடும்பத்திற்கு நிழல் பரப்பி
எம்மையெல்லாம் அன்போடும் பண்போடும் பாசத்தோடும்
வளர்த்து நல்வழிகாட்டி.
நற்கல்வியூட்டி. உறுதுணையாக இருந்து
சொந்த பந்தங்கள் அனைவருக்கும் பக்கபலமாய் இருந்து
சீரும் சிறப்புடன் வாழவைத்து.
மனிதருள் மாணிக்கமாய்.
குடும்பத்தின் தலைவராக. தந்தையாக மனம் பல
மாண்புடன் பரப்பி இனமெல்லாம் இன்புடன் வாழ
ஏற்ற நற்பணிகள் காத்து வையத்துள்
என்றும் நீங்கா ஒளியாகத் திகழும்
அன்புத் தெய்வத்தின் பாதக் கமலங்களிற்கு
இவ்வினிய மலரினைக்
காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

**என்றும் நீங்கா நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அமரர் திரு கார்த்திகேசு அருளம்பலம்

அன்னை மடியில்

20 * 10 * 1928



ஆண்டவன் அடியில்

26 * 05 * 2017

## திதி வெண்பா

புண்ணிவான் ஊரெழு கார்த்திகேசு அருளம்பலனார்
நண்ணிய ஏவிளம்பி வைகாசி மாசத்து - கண்ணிய
வளர்மதில் பிரதமையும் ரோகினியும் சேர்
கிளர்சிவன் தாள்சேர்ந்தார் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



## காப்பு

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றோமே

## தேவாரம்

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே

ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயோ
வாச மலரெலாம் ஆனாய் நீயே
மலையாண் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரனாய் அடியேன் மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலாம் ஆனாய் நீயே
திருவையாறகலாத செம்பொற் சோதி

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவ பெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கழுந் தருளுவ தினியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன்வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும் அடியார்கள்வினை தீர்த்த முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புரிய வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமைந்த பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# விநாயகர் அகவல்



சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பல்லிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறா தாரத் தங்குச் நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழிமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாவினொ லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்த னியக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயத்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்
திருள்வெளி யிரண்டிக் கொன்றிட மென்ன
அருள்தரு மானந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்த மளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்



திருச்சிற்றம்பலம்

தொல்லையிரும் பிறவிசூழும் தளை நீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க

கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தைஅடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி

நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி

சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லா வினையேன் புகழுமா றென்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி

மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாய் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையார் விண்ணோர்கள் ஏத்த

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி

மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்

நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் சிந்த அடியேர்க்கு
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசஅருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே

காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றினி வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்

தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிரவில் நட்டம் பயின்றாடும் நாதனே

தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்

செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்த சஷ்டி கவசம்



**காப்பு**

**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமல ரருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை

குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த குமரனடி நெஞ்சே குறி.

நூல்

நிலமண்டல ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட

மைய னடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென்று வந்து
வர வர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக

ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விணபவ சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக

ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும் -
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடையழகும் இணைமுழந்தாழும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேல் முந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றனை யாளும் ஏரகச் செல்வா
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
உன்றிருவடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர்வேலிரண்டு கண்ணினைக் காக்க
விழிசெவியிரண்டும் வேலவர் காக்க
நாசிகளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய் தனைப்பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க

கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருத்தோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத் தொடையிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க

ஐவிர லடியினை அருவேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னோக்க

தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடி படி
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற்படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்றும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டெறி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளங்களும்
என்பெயர் சொல்லவும் இடி விழுந்தோடிட

ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாளென்னைக் கண்டாற் கலங்கிட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடலங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு

குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியுங் இனித் தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புஞ்சு ளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ்சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசுஷயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்

எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவருமெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுரபவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா

பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீக்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்தி பெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்

வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை முறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினம்
பெற்றவன் நீ குரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தன்னென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுட னொரு நினைவது வாகி
கந்தர்சஷ்டி கவச மிதனைச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அட்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத்தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினிலி ருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
என்னைத் தடுத் தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில் நடமிடு வோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

கந்த சஷ்டி கவசம் முற்றிற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் கார்த்திகேசு அருளம்பலம் (அருணாசலம்) அவர்களின் வாழ்க்கை வரலாறு

*'மலர்மிசை ஏங்கினான் மாணடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடுவாழ்வார்'* - திருக்குறள்

ஈழத்தின் சிரசென வர்ணிக்கப்படும் வரலாற்றுப் பெருமை மிக்க வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தின் வலிகாமம் கிழக்கில் கற்றோர்களும் அறிஞர்களும், முற்போக்குவாதிகளும் தோன்றிய விவசாயக் கிராமம் ஊரெழு.

அந்த பொன்கொழிக்கும் ஊரெழுவில் உயர்வேளாளர் குலத்தில் சிறுப்பிட்டியூர் கார்த்திகேசு ஆச்சிமுத்து தம்பதிகளுக்கு 20.10.1928 ஆண்டு கனிஷ்ட புத்திரராக பூமியில் அவதரித்தார்.

இவர் உடன்பிறந்தோர் காலம் சென்றவர்களான இராசரட்ணம், மாசிலாமாணி, பவளமணி மற்றும் செல்வரட்ணம், அரசரட்ணம், சரஸ்வதி, திலகவதி ஆகியோருடன் சிறப்பாக வாழ்ந்து வந்தார். பள்ளிப்பருவம் வந்ததும் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் கல்வி வாழ்க்கையை முடித்த பின்னர் Colombo Marketing Department இல் எழுதுவினையராகப் பணிபுரிந்தார்.

மணப்பருவம் அடைந்ததும் ஊரெழு முத்தையா கனகம்மாவின் கனிஸ்ட புதல்வி ஞானபூபதியை 1962 ஆண்டு தை மாதம் கரம் பிடித்தார்.

அவர்களின் இல்வாழ்க்கையின் பயனாக பிரபாகரன், அனுஷா, தனுஷா, சுதாகரன், ஜீவாகரன், ரஜீகரன் ஆகிய மக்கள் செல்வங்களைப் பெற்றெடுத்து அன்பு பாசமும் மிகுந்த தந்தையாக வாழ்ந்து வரும் காலத்தில் அவரின் பிள்ளைகளுக்கு தேவையான கல்வி அறிவுக்கு அவரால் இயன்றளவு வழிகாட்டியாக இருந்தார்.
இவர் பிள்ளைகளின் உரிய காலத்தில் அவர்களுக்கு ஏற்ற மணமக்களை மணமுடிந்து வைத்தார். இவர்களின் அனுஷாவை ஸ்ரீராஜனுக்கும், தனுஷாவை சுந்தரேசனுக்கும், பிரபாகரனை விஜிலதாவுக்கும், சுதாகரனை துஷாந்தாவுக்கும், ஜீவாகரனை லதாவுக்கும் இனிதே கரம் பிடித்து கொடுத்தார். இதன் பயனாகப் பதினொரு பேரப்பிள்ளைகளைக் காணும் பாக்கியம் பெற்றார்.

இரண்டாயிரமாம் ஆண்டு அவரும் அவரின் பாரியாரும் பிரித்தானியாவில் குடியேறி வாழ்ந்து வரும் காலத்தில் மக்கள், பேரப்பிள்ளைகளுடன் அன்பு செலுத்தி மிகவும் ஆனந்தமாக வாழ்ந்து வந்தார்.

தனது 88 ஆவது வயதில் எல்லோரையும் துயரில் ஆழ்த்தி விட்டு இவ்வுலக வாழ்க்கையைத் துறந்து இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Family Tree (வம்

சிறுப்பிட்டியூர் பூதத்தம்பி கார்த்திகேசு
+
ஊரெழு ஆச்சிமுத்து

- இரசரட்ணம் + யோகம்மா
- மாசிலாமணி + தில்லைநாதன்
- பவளமணி + காசிப்பிள்ளை
- **அருளம்பலம்**
- செல்வரட்ணம் + விஜயலக்சுமி
- அரசரட்ணம் + சிவக்கொழுந்

அன்னைபூபதி + கந்தவனநாதன்

சொர்ணமலர் + சந்திரசேகரம்

- பிரபாகரன் + விஜிலதா
  - கர்ஜன்
  - காருஜன்
- அனுஷா + ஸ்ரீராஜன்
  - பிரியா
- தனுஷா + சுந்தரேசன்
  - திவ்வியா
  - திவ்வியங்கா
  - நிர்யா
- சுதாகரன் + துசாந்தா
  - ஷோபிகா
  - சிந்திஜா
  - சந்தோஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ம்ச விருட்சம்)

தெல்லிப்பளை இளையதம்பி முத்தையா
+
ஊரெழு கனகம்மா

ணம்
ழுந்து

சரஸ்வதி
+
தனபாலன்

திலகவதி
+
இரட்ணசிங்கம்

ர்
ம்

ஞானபூபதி

பூர்ணசந்திரன்
+
கருணை

பாலசந்திரன்
+
நல்லம்மா

தனபூபதி
+
நாகராஜா

ஜீவாகரன்
+
லதா

அனுஜன்
அருஷா

றஜீகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவியின் மனத்திலிருந்து


உங்களின் கரம் பற்றிய நாள் முதலாய் ஈருடலும் ஓருயிருமாய் வாழ்ந்து வந்தோம். எமது இல்லற வாழ்க்கை வள்ளுவரும் வாசுகியும் போல் இனிமையாக அமைந்து இருந்தது.

அதன் பயனாய் முத்தாக ஆறு பிள்ளைச் செல்வங்களைப் பெற்றெடுத்து சீராகவும் சிறப்பாகவும் வளர்த்து வந்தோம். உங்களிடம் இருந்து கனிந்த மொழி தவிர ஒரு கடுஞ்சொல்லைக் கேட்டதில்லை. வாழ்க்கையில் வந்த இன்ப துன்பங்களை நாமிருவருமே பகிர்ந்து வாழ்ந்து வந்தோம்.

1984ம் ஆண்டு தீராத நோய்வாய்ப்பட்டு அதிலிருந்து மீட்டெழும்பி வந்த பின்னர் குழந்தை போல் உங்களைப் பராமரித்து வந்தேன். பிள்ளைகளின் ஆசைப்படி 2000ம் ஆண்டு லண்டன் மாநகருக்கு வந்து சேர்ந்தோம்.

எப்பொழுதும் என்னைப் பிரியாது அருகிருந்த உத்தமரே! இப்பொழுது ஏன் பிரிந்தீர்கள்? இறைவன் உங்களை அழைத்தானோ? எல்லாம் இந்த இறைவனின் சோதனையும் இயற்கையின் நியதி என்று என் மனதினைத் தேற்றிக்கொண்டு உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றேன்.

உங்கள்
**பாசமுள்ள மனைவி**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றும் அன்பான அருமை அப்பா!!!

எங்களுக்கு உயிர் கொடுத்து, உணவளித்து, கல்வி என்னும் செல்வத்தைத் தந்து, அன்பைப் பொழிந்து அரவணைத்து வளர்த்தீர்கள். ஆனால் உங்கள் செல்வங்கள் எல்லாம் நீங்கள் இல்லாது இன்று நிலைகுலைந்து நிற்கின்றோம். நீங்கள் மீண்டும் எங்களிடம் எழுந்து வர மாட்டீர்களா அப்பா?

எங்கள் எல்லோரையும் சைக்கிளில் ஏற்றி பாடசாலைக்கும், தனியார் கல்விக்கூடங்களுக்கும் அழைத்துச் செல்வீர்களே! செல்லும் போது பல அறிவுரைகளையும் புத்திமதிகளையும் கூறி மிகவும் சிறந்த வழிகாட்டியாக இருந்தீர்கள். உங்களின் சிரித்த முகத்தை இனி நாங்கள் எங்கு காண்போம்? ஏன் எங்கள் எல்லோரையும் விட்டுத் தனியாக பிரிந்து சென்றீர்கள்? இனி அப்பா என்று அழைக்க யாருமின்றி அலறித் துடிக்கிறோம்.

உங்கள் பிள்ளைகள் நன்றாக வாழவேண்டும் என்பதற்காக இரவு பகல் பாராது கடுமையாகப் பாடுபட்டீர்கள். உங்கள் உடல் நலத்தைக் கூட சரிவரக் கவனியாது 1984 ஆண்டு கடும் நோய் வாய்ப்பட்டு இவ்வுலகையே விட்டுச் செல்லும் அளவிற்கு வந்தீர்கள்.

ஆனால் எங்கள் பிரார்த்தனைகளாலும் அதிஸ்டத்தாலும் அதில் இருந்து மீண்டும் எங்களிடம் வந்து சேர்ந்தீர்கள். நாங்கள் அடைந்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை. அன்றில் இருந்து இறுதி நேரம் வரையும் அம்மாவுடனும், எங்களிடமும் எல்லோருடனும் உங்கள் அன்பையும் அரவணைப்பையும் தந்து வாழ்ந்து வந்தீர்கள். இரக்கமில்லா காலனுக்கு இந்த சந்தோசம் பிடிக்காது உங்கள் அழைத்தானே?


பிறப்பும் இறப்பும் உண்மை என்றாலும் உங்களின் பிரிவை சிறிதளவும் எம்மால் தாங்கிக் கொள்ள முடியாது நிற்கிறோம்.

தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும் தந்தை அன்பின் முன்னே
தாலாட்டு பாடும் தாயின் அன்பும் தந்தை அன்பின் பின்னே.

நீங்கள் இறைவனடியில் இறைப்பாற வேண்டி நிற்கின்றோம்.

உங்களின் செல்வங்கள்

**பிரபா, அனுஷா, யுகி, சுதா, ஜீவா, ரஜி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு, பண்பு பாசத்தின் சிகரம் எங்கள் மாமா

அன்பால் பண்பால் உயர்ந்த எங்கள் பாசமிகு மாமாவின் பிரிவை எங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மாமா எங்களை மருமக்கள் போல் பார்க்காது தனது பிள்ளைகளைப் போலவே பார்த்துக் கொள்வார். தனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் சந்தோசமே தனது சந்தோசம் என வாழ்ந்தவர் எங்கள் மாமா.

என்ன சோதனைகள் வந்தாலும் எப்போதும் சிரித்த முகத்துடனேயே இருப்பார். நாங்கள் மணம் முடித்து வந்த நாள் முதல் புன்முறுவலைத் தவிர வேறு எதையும் பார்த்ததில்லை. இன்று அவரின் அன்பு முகத்தைக் காணாது ஏங்கி நிற்கின்றோம்.

இவரது வாழ்வு மற்றவர்களுக்கு நல்ல எடுத்துக்காட்டு. ஒரு நல்ல குடும்பத்தலைவராக வாழ்ந்து இவ்வுலக வாழ்வை முடித்துள்ளார். அவரது மறைவு எங்கள் எல்லோருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். பாசமிகு மாமாவின் பிரிவால் துவண்டு நின்று அவரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்தின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**அன்புள்ள மருமக்கள்**

## எனது அன்பு சகோதரனுக்கு!

எனது சகோதரர் கார்த்திகேசு அருளம்பலம் மிகுந்த பொறுமையுடையவர். எந்த நேரமும் சிரித்த முகத்துடன் இருப்பார். ஒருவரையும் நொந்து பேச மாட்டார். எல்லோருக்கும் உதவி செய்வார். நான் என் குடும்பத்துடன் இருக்கும்பொழுது எங்களைத் தேடி வருவார். பிள்ளைகளுக்குப் பிடித்தமான பழங்களைத் தேடி வாங்கிக் கொடுப்பார். நாங்கள் வீட்டுக்குப் போனால் சந்தோசமாக வரவேற்று உபசரிப்பார்.

நாட்டுப் பிரச்சனையால் எல்லோரும் நாடு விட்டு வரவேண்டி வந்தபடியால் அவர் லண்டன் சென்று தன் பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தார். நாங்கள் கனடா வந்து விட்டோம். நேற்றிருந்தார் இன்றில்லை. இந்த நியதியில் மாற்றம் இல்லை. தேற்றுவோம் மனதை.

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவதில்லை.

**கார்த்திகேசு செல்வரட்ணம் குடும்பம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரங்கல் மடல்

அன்பின் உறைவிடமாய் - பண்பின் இலக்கணமாய்
அனைவருக்கும் நிழல் தரும் ஆலமரமாய்
துயர் போக்கும் அருமருந்தாய்
உயர்ந்த நன்னோக்கனாய்
உற்றார், உறவினர்க்குப் படரும் கொழுகொம்பாய்
பெற்றவர்க்குப் புகழ்சேர்த்த அருமைந்தனாய்
பாசமுள்ள கணவனாய், தந்தையாய், பேரனாய்
அணைத்துக் காத்திடும் அண்ணனாய்

மதிப்புடைய நண்பனாய்
வாழ்வாங்கு வாழ்ந்து
போதும் என்று எண்ணி
வானுலகம் நாடி
சென்றாயோ அண்ணா!

தங்கள் பிரிவு துயரால்
வாடுகிறோம் அண்ணா!

எங்கள் துயர் துடைக்க
யாரும் இல்லை அண்ணா!!

தங்கள் ஆத்ம சாந்திக்காக
வல்லயை ஆதிபராசக்தி
அன்னையை வேண்டுகிறோம் அண்ணா!!!
நெருநல் உளனொருவன்
இன்றில்லை பெருமை உடைத்திவ்வுலகு
தங்கள் பிரிவு துயரால் வாட்டமுறும்

அன்பு அண்ணா அமரர் இராசரட்ணம்
அன்னாரின் மனைவியும், பிள்ளைகளும்
மருமக்களும், பேரர்களும்.
அன்பு தம்பி கார்த்திகேசு அரசரட்ணமும் மனைவியும், பிள்ளைகளும், மருமக்களும், பேரர்களும்

அன்பு தங்கை தனபாலன் சரஸ்வதியும் பிள்ளைகளும், மருமக்களும், பேரர்களும்,

அன்பு தங்கை திலகவதியும், கணவர் இரட்ணசிங்கமும்

அன்பின் மருமகள் ராஜேஸ்வரியும், கணவர் சரவணபவனும்,
சிறுப்பிட்டி கிழக்கு நீர்வேலி, இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பில் சிறந்த அருணாசலம் மாமா

எங்கள் மாமாவின் மறைவுச் செய்தி, எங்கள் எல்லோரையும் மிகுந்த துயரத்தில் ஆழ்த்தி விட்டது. அவரது மறைவுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, நவீன தொழில் நுட்பத்தின் உதவியினால், இங்கு இருந்து அவரைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இத்தருணத்தை உண்டாக்கித் தந்த எமது மாமிக்கு (அத்தை) மிக்க நன்றி. மாமாவைப் பார்த்தவுடன் அவரது புன்னகை தவழும் முகம், எல்லோரையும் ஈர்க்கும் கருணையுடன் கூடிய அன்பு கலந்த பார்வை, இவை தான் எமது கண் முன்னே வந்து நின்றது.

சகோதர பாசம் என்பதற்கு முன் உதாரணமாக எமது அம்மாவும், மாமாவும் இருந்தார்கள். சிறுவயது முதல் அவர்களைப் பார்த்து நாம் கற்றுக்கொண்டவை, இன்று எமக்கு வழிகாட்டியாக இருக்கிறது. அருணாசல மாமா என்று கூப்பிட எமக்கு இனி யார் இருக்கிறார்கள்? மாமா, நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவு எங்களுடனேயே இருக்கிறது.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

**சாந்தா – மகேந்திரன்**
**வசந்தா – சச்சி**
**பேபி – சரவணபவான்**
**ஜெயந்தி – நிரஞ்சன்**
**(கனடா, இலங்கை)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Thatha, The Man Who Lit Up Every Room with No Words

On behalf of my family I would like to thank you all, our family and friends for your condolences, prayers and thoughts, which have helped us hugely during this difficult time.

Upon hearing of Thatha's passing as I landed in Sri Lanka, my heart shattered into a thousand pieces. Devastation, heartbreak and despair are some of the words that come to mind to describe my feelings throughout this hour. Nonetheless, after much consoling from Amma and Appa, I slowly started to reminisce about all the fond memories I shared with Thatha. Being in Sri Lanka helped bring back many of the times we shared together and this allowed me to realise what a wonderful and fruitful life he had, surrounded by his loved ones who absolutely adored and doted on him continuously. Thatha was jovial, forever camera ready with his impeccable dress sense, whilst always wearing his iconic and captivating smile.

Most of you will not know that he loved to have a cheeky drink; whiskey with a little bit of water was his go to. And, who do you think would be his perfect partner in crime? My dad, of course! When Ammama and Thatha came to stay with us, every evening I'd come home to find them both sat in their batik sarams, whiskey glass in hand, a bowl of Jaffna mixture positioned equi-distant while glued to Deepam TV news. Thatha took it one step further during our trip to the Maldives in 2013. After a twelve-hour journey, an airport customs officer who had Thatha's suitcase stopped us and we were made aware that his suitcase contained a litre bottle of Famous Grouse. With the Maldives being a Muslim country, this was confiscated immediately much to Thatha's disappointment but our amusement. Little did we know, he was not just an occasional drinker; we found Thatha wandering by himself to his local Co-op to top up his secret supply numerous times.

Throughout his life and even during his later life he prided himself in his appearance, always dressed in immaculately ironed clothes, and slicked back hair maintained regularly with his little comb that sat in his trouser


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

pocket. This was evident at my graduation in 2015 when I needed over 50 takes to get my final graduation photo and he just needed one. Befittingly, this is the photo used at his funeral, which beautifully displayed his trademark smile.

Whilst he was a man of few words, he was a gentle soul who cherished his family above all else. In typical Thatha fashion, he never wanted to disappoint his loved ones. I remember my last visit over Easter weekend and his health was slowly deteriorating and he would only consume liquids. Unknowingly, I offered him one of his favourite treats, a banana vaaipan. To everyone's surprise he was able to muster up the strength to share the banana vaaipan with me.

Let us not forget the most significant person in Thatha's life who dedicated every second of the last fifty-five years to him. Ammama, your unparalleled care and affection towards Thatha is the reason that he was able to be the wonderful gentleman that we all know and love. On behalf of the grandchildren, we owe you the most heartfelt thank you for the constant tender loving care of Thatha right through to the end. I am sure he would agree with me when I say, without you we wouldn't have been able to know such a great man.

Goodnight Thatha – you'll be missed but never forgotten.

Lots of love,

**Priya**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Thatha, We Will Miss You

Our beloved Thatha, what a remarkable man he was. Thatha throughout my life has been a great influence since 1999 when I first met him in India at the age of four.

Amma told us that when we were four she dressed us in little shorts and vests. It was safe to say that Thatha definitely did not approve of Amma's choice of clothes for us and he told us to go get changed. Thatha was a man of presentation and pride who also had high expectations for us all, that was an admirable characteristic of his.

Following India, Ammama and Thatha moved to London and three years later we had the perfect opportunity for them to come live in Ipswich with us. This time in our lives was the happiest, as we saw Thatha on a daily basis. After school, we would walk to Ammama and Thatha's house to join him for his timely 5pm tea and biscuits. At the age of eight, we remember having to go upstairs in the dark to shower (which was a terrifying experience at the time); Thatha being the patient man that he is, would walk us upstairs and wait until we had finished and walk us back down, with no complaints and just huge smile on his face alongside a little nod.

Thatha in his healthier years was not one to say no to an adventure. For us, this meant going for a walk round Bixley Farm and trips to the park, especially when our parents were busy with work. We had the pleasure of accompanying him on many holidays, from Canada to Sri Lanka to the Maldives and he enjoyed all of them. It's safe to say Thatha did live life to the full, and has a lot to show for it.

What I loved about Thatha was the beauty of how he communicated with a single smile so silently. In the 80's Thatha overcame a brain tumour which resulted in impairing his hearing, however regardless of this his loving personality shone through. He had a great


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

perspective when it came to the littlest of things, never showing impatience or anger. Instead he lived life with great dignity and happiness. No matter what pain or difficulty he experienced, when you walk in to his house he will be sat in his specific chair, waiting to offer a smile to everyone to brighten up his or her mood.

Thatha's passing has been extremely difficult for us all and we are ever so heartbroken that we will never see his smile again. We will miss you so dearly Thatha but hope you are in a better place now, smiling down on us proudly.

Lots of love,

**Thiviya and Thiviyanka**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எங்கள் அன்பின் அப்பப்பாவுக்கு...**

அப்பப்பா! நீங்களும் அப்பம்மாவும் 2001ம் ஆண்டு எங்களைப் பார்ப்பதற்காக சுவிசுக்கு வந்தீர்கள். அப்போது நாங்கள் சிறு பிள்ளைகள் ஆனபடியால் எங்களுக்கு உங்களின் ஞாபகம் இல்லை.

ஆனால் நாங்கள் இப்போது நன்றாக வளர்ந்து விட்டோம். உங்களைப் பார்ப்பதற்காக லண்டன் வந்தபோது நீங்கள் எங்களைக் கண்டவுடன் கட்டி அணைத்து முத்தம் தந்து உங்களோடு சேர்ந்து நின்று புகைப்படமும் எடுத்து வந்தோம். ஆனால் அதுதான் கடைசிச்சந்திப்பு என்று எங்களுக்கு புரியவில்லை.

எங்கள் அப்பாவும், அம்மாவும் உங்கள் இறுதிக்கிரியைகளுக்கு வரமுடியவில்லை. ஆனால் எங்கள அனுப்பி வைத்தார்கள். அது நீங்கள் எங்கள் மீது வைத்துள்ள பாசத்தினாலோ தெரியவில்லை.

எங்களை அழைத்தீர்கள் அப்பப்பா? இனி உங்களை நாங்கள் எப்பொது காண்போம் அப்பப்பா!

உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் அன்பான

**கர்ஜன், காருஜன்**

## Our Loving Appappa

Our Appappa, was the most selfless and caring man in the world. He carried the love for us in his golden heart like no other and was always there for us when we needed him the most. There aren't enough words to describe how much we are going to miss him and his heavenly smile. Today, we feel a great sadness to no longer have him by our side.

Appappa was always behind us, supporting us from day one. Occasionally, he would join in and play with us, thoughtfully cleaning up all our toys that we had left scattered across the floor.

From time to time, we weren't the easiest of children to look after, as we liked to cause a lot of trouble. Nevertheless, there was not a single day where he would stop smiling or tell us off. He would patiently and kindly correct our mistakes.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

There was also no other man who dressed up smarter than Appappa. He was always well dressed in his freshly ironed clothes and his hair brushed back neatly. It was the kind of smartness that people would aspire to.

Although, we may not have known him for as long as most people in this room, he was a beautiful blessing in our lives and someone who inspired us greatly. He will remain in our hearts for a lifetime.

Appappa, seeing you undeniably put a smile on everybody's face; you were a ray of sunshine on a cloudy day and we are forever grateful for all the passion and wisdom you have shared with us. The love you gave us is irreplaceable and the memories we all shared with you are everlasting. You were an amazing man and filled all of our hearts with joy and happiness.

May your soul rest in peace.

Lots of love,

**Shoba, Sinthu and Santosh**

## Goodnight Thatha

Thatha has been in my life since the day I opened my eyes. From seeing him often, I noticed how happy he always was. When I visited him in Norwich the first thing he always does is open his arms wide open for a big, big hug. My favourite time was treating him like a king by taking him to Buckingham Palace for his birthday, and going for tea there. This was his favourite snack. I will treasure these happy memories Thatha.

I love you and will miss you Thatha,

**Nirja**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Appapa

Appapa, you were there every day from the moment I was born until you left us to be with God. I grew up under your watchful and loving eyes whilst you also looked after me with so much affection and care. Everyday, you would sit in your chair and observe me with so much joy on your face while I played with my toys on the floor next to you. You'd even help me put away my toys and teach me how to play with them correctly. After school you would welcome me home with a big warm cuddle, pat my back and give me a gentle kiss on my hand.

Unusually, on your last day with us, I came to your room to give you a big cuddle in the morning before I left for school. I didn't know it would be our last cuddle Appapa otherwise I would have held on for that little bit longer- I'm going to miss you so much.

Goodnight Appapa,

**Anujan**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் மேம்பட...

குடும்பத்திலும் சரி அலுவலகத்திலும் சரி மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க...

- நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.
- அர்த்தமில்லாமலும், பின்விளைவை அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள்.
- எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாகுக்காக கையாளுங்கள் விட்டுக்கொடுங்கள்.
- சிலநேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள்.
- நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள். குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.
- உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள்.
- மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வமாகாதீர்கள்.
- அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்.
- எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள்.
- அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள்.
- உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளாத்திக் கொள்ளுங்கள்.
- மற்றவர் கருத்துக்களில் செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாக புரிந்து கொள்ளாதீர்கள்.
- மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும், இனிய, பதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்.
- புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- பேச்சிலும், நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து, அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்.
- அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.
- பிரச்சனைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத்துவக்க முன் வாருங்கள்.

- தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி---


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைக்கு சில வரிகள்

அன்பை வாங்கவும் முடியாது விற்கவும் முடியாது
அன்பின் விலை அன்புதான்.

அறிவாற்றலால் கடவுளை அறிய இயலாது
ஆத்மீக சக்தியால் அவரை உணரலாம்.

பிறரை மாய்க்க எண்ணுபவன்
தன்னையே அழித்துக் கொள்வான்.

ஆட்டின் வேஷத்தில் ஓநாய்களும் வரலாம்
ஆதலால் நீ எதற்கும் எச்சரிக்கையாய் இரும்.

அன்பிற்கும் அறிவிற்கும் எல்லையே இல்லை.

நன்மையை பலர் விரும்புவார்கள் - ஆனால்
உண்மையை சிலரே விரும்புவார்கள்.

அன்பு உன் அன்னை. அறிவு உன் தந்தை
அறம் உன் சகோதரம். பொறுமை உன் மனைவி
பண்பு உன் மகன். ஆண்மை உன் மகள்.
இக்குடும்பத்துடன் சேர்ந்து வாழுங்கள்.

ஒரு வார்த்தை பேசினாலும் அதைப் பலமுறை சிந்தித்துப் பேசு.

மனிதனின் முதல் எதிரி கோபம்தான் - அது
மனிதனை குருடனாக்குகிறது. செவிடனாக்குகிறது.
அறிவைக் கெடுக்கிறது. ஆதாள பள்ளத்தில் தள்ளுகிறது.

சிந்தித்து செயலாற்று அது உன் வெற்றிக்கு
வழி கோலும்.

தவறுகள் திருத்தப்பட வேண்டியவையே ஒழிய
அவை விமர்சிக்கப்பட வேண்டியவை அல்ல.

சிரியுங்கள், உலகம் உங்களுடன் சேர்ந்து சிரிக்கும்
அழுங்கள், நீங்கள் மட்டும் தான் அழுவீர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கள ஆரத்தி

ஜெய ஜெய ஜெய சக்தி - ஓம் ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய வெனு தினம் பாடிப் பணிந்தோம்
ஜெக மெங்கும் அமைதியைத்தா – ஓம் ஸ்ரீ (ஜெய)

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவை எல்லாம் மறைய – அம்மம்மா
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பி லெமை – ஓம் ஸ்ரீ (ஜெய)

இரண்டுகள் போக மூண்றுக ளகல
ஈஸ்வரி பல மருள்வாய் - அம்மம்மா
கரங் குவித்தோமினி காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் – ஓம் ஸ்ரீ (ஜெய)

காசினி எங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன் பருள்வாய் - அம்மம்மா
தேசுடன் வாழக் காட்டடி காஷி
தேவியுடன் அடைக்கலம் நாம் – ஓம் ஸ்ரீ (ஜெய)

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து – அம்மம்மா
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்துக் கமைதியைத் தா – ஓம் ஸ்ரீ (ஜெய)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எமது குடும்ப விருட்சமாக விரிந்து படர்ந்து நிழல் தந்த எங்கள் அன்புத் தெய்வம் **திரு கார்த்திகேசு அருளம்பலம்** அவர்களின் பிரிவுச்செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், உள்நாட்டிலும், வெளிநாடுகளில் இருந்து தொலைபேசியில் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்க் கொத்துக்கள் அனுப்பியோருக்கும், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், நேரில் வந்து உதவிகள் புரிந்தோருக்கும், நேரிலும் தொலைபேசி மூலமும் வைத்தியமும், வைத்திய ஆலோசனைகள் வழங்கிய (இறுதி நேரத்திலும்) எங்கள் குடும்ப வைத்தியர் Dr. Prabhahar அவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், அந்தியேட்டிக்கிரியைகளைச் சிறப்பாக நடத்திய அந்தணப்பெருமக்களுக்கும், அந்தியேட்டிக்கிரியைகளில் கலந்து, ஆத்ம சாந்திப் பூசைகளிலும் கலந்து கொண்டவர்களுக்கும் எங்கள் உள்ளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

**என்றும் அன்புடன்**
**மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**



**Designed & Printed @ JR Print**
**Tel: 020 8503 6643**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org